திரு. கோ. சி. மணி : கிராமங்களிலே இருக்கிற கிராம உத்தியோகஸ்தர்கள், அல்லது பட்டாமணியக்காரர்கள், கர்ணம் போன்றவர்கள் அறுவடை காலத்திலே, மாமூல் என்ற பெயரால், நெல்லாக பெறுகிறார்களே? அதுவும் லஞ்சத்தில் தான் அடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : "மாமூல்" என்ற வார்த்தை தமிழ் வார்த்தை அல்ல. அது ரொம்ப நாட்களாக ஏற்பட்டது. அந்தக் காலத்திலிருந்தே வந்து விட்டது. அதுவும் லஞ்சம்தான். ஆனால், இதையெல்லாம் அகற்றவேண்டுமென்றால் பொது மக்களுக்கு உயர்ந்த விழிப்பு இருக்கவேண்டும். அவர்களும் கண்டிப்பாக இருக்க வேண்டும். இதே மாதிரி மாமூல் கேட்பதாக இருந்தால், அதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்யவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எந்தெந்த இலாகாக்களில் லஞ்சம் அதிகமாக இருக்கிறது என்ற விவரங்கள் கூறமுடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் இது பற்றி தனியாகக் கேள்வி போட்டால், நான் விவரங்களைப் பார்த்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். மணி : கிராம முன்சீப்களிடமிருந்து ஏதாவது நற்சாட்சிப் பத்திரம் பெறவேண்டுமென்றால், அதற்காக ரூ. 2 கட்டணம் கொடுத்தால்தான் தருகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எங்களுக்குத் தெரியாது. ஏதாவது குறிப்பாக அம்மாதிரி நடைபெற்றது பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால், அதற்கு மேலே என்னென்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியுமோ அதையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம்.

Yarn

* 324 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to reduce the price of yarn supplied to weavers?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[a] is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரைக்கும், பெரும்பாலும் தேவையாக இருக்கக்கூடிய சன்னரக நூல், 60-ம் நம்பருக்கு மேற்பட்ட நூல்கள் நியாயமான விலையில் கிடைப்பதில்லை. ஸ்டேட் சொஸைடிகளுக்குக் கிடைப்பது கூட மிகக் குறைவு. கூட்டுறவு சொஸைடிகளுக்குத் தேவைப்படும் நூல் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு கோவையில் ஒரு கூட்டம் நடத்தினோம். மில் அதிபர்கள், மில் நூலில் வியாபாரம் செய்கிறவர்கள், அதே போல கைத்தறி நெசவாளர் பிரதிநிதி, கூட்டுறவுச் சங்கத் தலைவர் எல்லோரும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. 60-வது நம்பருக்கு மேற்பட்ட நூல்களையெல்லாம் "எக்ஸ் மில் பிரைஸ்" அவர்களுக்கு என்ன விலையில் கொடுக்கிறார்களோ, அதே விலைக்கு கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு வெளியே இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு, "எக்ஸ் மில் பிரைஸ்" "ப்ளஸ்" "ஒன் பெர்ஸண்ட்" விலை போட்டு, ஹாண்டு லூம் டைரக்டர் எந்தெந்த சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்துகொண்டு ஒழுங்காக நூல் விநியோகம் செய்கிறார்கள் என்று

[a] Printed as Appendix I on pages 89

16th July 1962]

அத்தாட்சி கொடுக்கிறார்களோ அந்த சங்கங்களுக்கெல்லாம் அந்த விலைக்குக் கொடுக்கவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. அதிலிருந்து ஓரளவுக்கு கூட்டுறவு சங்கங்களிடமிருந்து எந்தவிதமான புகாரும் வரவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து புகார் வரவில்லை என்று சொன்னார்கள். என்னிடம் ஒரு ஜாபிதா இருக்கிறது. பிரைமரி சொஸைடிகளுக்கு ஸ்டேட் சொஸைடி மூலம் நிர்ணய விலையில் நூல் கிடைப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. அந்தப் புகாரைப் போக்குவதற்கு கூட்டுறவு சங்கங்களால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் சொஸைடிகளுக்கு குறைந்த பட்சம் இவ்வளவு நூல் ஒதுக்க வேண்டும் என்று ஒரு 'கோட்டாவை' நிர்ணயம் செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படித்தான் செய்யப்படுகிறது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வந்திருக்கிற செய்தி, இரண்டு மூன்று மாதங்களுக்கு முற்பட்ட செய்தி. ஆனால், இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட பிறகு ஹாண்டுலூம் டைரக்டர், கூட்டுறவு சங்கங்களுக்கு எவ்வளவு வேண்டும் என்று கணக்கெடுத்து, அந்தக் கணக்குப்படி அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று "மில் ஓனர்ஸ் அஸோஸியேஷனுக்கு" எழுதி, அதன்படி வாங்குகிறார்கள் சென்ற மாதத்திலிருந்து. கூட்டுறவில் இல்லாமல் இருக்கிறவர்கள் விஷயத்திலே ஒரு கஷ்டம் இருக்கிறது. கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கிற நூல் நிச்சயம் நெய்யப்படுகிறது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். கூட்டுறவுச் சங்கங்களில் இல்லாத வீவர்களுக்குக் கொடுக்கிற நூல் நெய்யப்படுகிறதா அல்லது வேறு இடங்களில் விற்கப்படுகிறதா என்பதை சரியாகச் சொல்ல முடியவில்லை ஆகவே, மில் அதிபர்கள் எந்த ஒரு "சானல் ஆப் டிரேட்" வைத்துக் கொண்டிருக்கிறார்களோ, யாருக்கு மாமூலாக வழக்கமாகக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு "ஒன் பர்ஸெண்ட்" அதிகமாக வைத்துக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அதையும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அதையும் நாங்கள் ஒப்புக் கொண்டோம்.

திரு. க. ர. நல்லசிவம் : கனம் அமைச்சர் அவர்களிடத்தில் ஒப்புக் கொண்டவர்களிலே, ஒரே ஒரு மில்காரர் நீங்கலாக பாக்கிப் பேர் சரியாக நடந்துகொள்ளவில்லை என்ற புகார் வந்திருக்கிறதா ? நம்மிடம் சரியான அதிகாரம் இல்லாத காரணத்தினால், அவர்களை மீண்டும் கூட்டி வைத்து, குறிப்பிட்ட விலையில் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் கூட்டம் நடக்கிறபொழுது, சில மில்கள் கொடுக்கவில்லை என்ற புகார் வந்தது. சில மில்கள் கொடுக்கவில்லை என்ற புகார் எப்பொழுதும் வரத்தான் செய்யும். அதற்குக் காரணம் என்னவென்றால், சில மில்களுடைய நூல் உயர்ந்த ரகமாக இருக்கிறது. சில மில்களுடைய நூல் சாதாரண ரகமாக இருக்கிறது. உயர்ந்த ரகம்தான் வேண்டுமென்று எல்லோரும் கேட்டால், அது கிடைக்காது. உயர்ந்த ரக நூல் கோட்டா எவ்வளவு, சாதாரண நூல் கோட்டா எவ்வளவு என்று நிர்ணயம் செய்து, பங்கிடு செய்து டைரக்டர் ஆப் ஹாண்டு லூம்ஸுக்கு கொடுக்கிறார்கள்.

திரு. வை. சங்கரன் : நூல் விலை ஏறுவது ஒரு "ஆன்யுவல் ஃபீச்சர்" ஆகிவிட்டது என்ற காரணத்தினால், நூல் விலை ஏறிய பிறகு மகாநாடு கூட்டி அதைக் குறைப்பதற்கு ஒரு சில மாதங்கள் ஆகிவிடுகிறபடியால், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் மிகவும் குறைந்த வருமானம் உள்ளவர்களாக இருப்பதால், அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, நூல் விலை ஏறின உடனேயே விலையைக் குறைப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை கூடிய சீக்கிரத்தில் எடுத்து நிவாரணம் அளிப்பதற்கான வழிவகைகளை சர்க்கார் மேற்கொள்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி முன் கூட்டியே நடவடிக்கைகள் எடுப்பதாக நான் என்னைப் போற்றிக்கொண்டிருக்கிறேன். அப்படி யில்லை என்று சொன்னால், அதற்காக நான் வருந்துகிறேன். மத்திய

சர்க்கார் நூல் விலையை நிர்ணயம் செய்யவேண்டுமென்று சொல்லி 8 மாதங்கள் ஆகியும் இன்னும் ஒன்றும் செய்யாமல் இருக்கிறபொழுது நம்முடைய ராஜ்யத்தில் இந்த அளவுக்காவது நூல் விலையை ஒரு நேரடியான ஒப்பந்தத்தில் அடிப்படையில் கட்டுப்பாடு செய்து நம்முடைய ராஜ்யத்திலுள்ள தறிகளுக்கு விநியோகம் செய்ததைக் குறித்து நூல் உபயோகிக்கிறவர்களும், மற்றும் நெசவாளர்களும் வரவேற்கிருர்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் எடுக்கும் நடவடிக்கையானது, அதாவது மகாநாடு கூட்டுவது, பேச்சுவார்த்தைகள் நடத்துவது, கனம் அமைச்சர் அவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இருக்கக்கூடிய நல்லெண்ணத்தைக் காட்டும். அதனுல் பலன் ஏற்பட்டு விட்டது என்று திருப்தி அடைந்துவிடமுடியாது. கடந்த இரண்டு ஆண்டுகளில் நூலின் விலை 20 சத விகிதம் அதிகமாக உயர்ந்திருக்கிறது. இப்பொழுது கூட்டிய மகாநாட்டின் நோக்கம் இன்னும் விலை உயரக்கூடாது என்பதற்காகவா, அல்லது விலையைக் குறைப்பதற்காகவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ட்ராமன் : இரண்டு ஆண்டுகளாக நூல் விலை உயர்ந்திருக்கிறது என்று சொல்லும்பொழுது, 40-ம் நம்பர் நூலைப் பொறுத்தவரையில் அது சரியல்ல. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா காட்டன் மில்ஸ் பெடரேஷன் 40-ம் நம்பர் நூல் வரையில் ஒரு விலை நிர்ணயம் செய்தார்கள். அந்த விலைப்படி நமது கூட்டுறவு சங்கங்களுக்கு மில் ஓனர்ஸ் அஸோஸியேஷன் கொடுத்துக்கொண்டு வருகிருர்கள். 40-ம் நம்பர் நூலுக்கு மேற்பட்ட ரகமானது, வெளிநாட்டுப் பஞ்சை வைத்து உற்பத்தி செய்யப்படுவதால், அதன் விலை வெளிநாட்டுப் பஞ்சு என்ன விலைக்கு விற்கிறதோ, அதைப் பொறுத்திருக்கிறது, நிர்ணயம் செய்ய முடியாமல் இருக்கிறது. சில சமயங்களில் வெளி நாட்டுப் பஞ்சின் விலை கிடுகிடு என்று உயர்ந்து விடுகிறது. சில சமயங்களில் தாழ்ந்து விடுகிறது. காட்டன் என்பது உலகச் சந்தையிலே விற்கப்படும் பொருள். ஆகவே, உலகச் சந்தையிலே ஏற்படும் மாறுதல்கள் விலைவாசிகளை வெகுவாகப் பாதிக்கிறது. அந்த முறையில் 60-வது நம்பர் நூல் விலை உயர்ந்திருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு, டாரிப் போர்டுக்கு ரெபர் செய்திருக்கிருர்கள். டாரிப் கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகு விலை நிர்ணயம் செய்வார்கள்.

திரு. சோ. ஆறுமுகம் : இந்தப் பட்டு நூல் கோட்டா தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கிற காரணத்தால் அவர்கள் அதை ப்ளாக் மார்க்கெட்டில் விற்று லாபம் அடைகிருர்கள். அதனுல் ஒவ்வொரு வட்டாரத்திலும் சர்க்கார்டிப்போவை வைத்து, கார்டுகள் வழங்கி, கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்க முன்வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ட்ராமன் : கனம் அங்கத்தினரின் கேள்வி வில்க்கைப் பற்றியது தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லுகிறேன். அந்த மாதிரி சர்க்கார் டெப்போக்கள் வைத்து நடத்தினல், தலைமுறை தலைமுறையாக் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுக்குப் பிழைப்பு போய் விட்டது என்று சர்க்காரிடம் முறையிடுகிருர்கள். எது நியாயம் என்பதைக் கண்டு பிடிப்பது கஷ்டமாக இருக்கிறது.

திரு. கோ. வெங்கட்டராமன் : தற்பொழுது விலை ஏறுவதற்கு டெப்போ முறைய்யை மில் அதிபர்கள் கையாண்டு வருகிருர்கள் என்பதுதான் காரணம் என்று சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானுல், அந்தடெப்போ முறையை அமல் நடத்தாமல் இருப்பதற்கு சர்க்கார் வழி வகை செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எல்லா இடங்களிலும் நல்ல விலைக்கு விநியோகம் செய்யப்படுகிறது என்று சொல்லமுடியாது. ஒவ்வொரு இடத்திலும் நியாய விலைக்குக் கிடைக்கவேண்டுமென்று சொன்னுலும் கூட, ஆங்காங்கு இருக்கக்கூடிய தேவைகள், சூழ்நிலையை ஒட்டி கொஞ்சம் அதிகமாக வசூலித்து வருகிருர்கள் என்று புகார்கள் வருகின்றன. பொதுவாகப் பார்க்கிறபொழுது, இந்த முறை 100-க்கு 80 சத விகிதம் சரியான வகையில் வேலை செய்கிறது. டெப்போ முறை வேண்டாம் என்று சொன்னல்

16th July 1962]

கண்ட்ரோல் முழுவதையும் எடுத்துக்கொண்டால்தான் செய்ய முடியும். இப்பொழுது எந்தவிதமான கண்ட்ரோலும் இடையாது. முழுக் கண்ட்ரோலையும் எடுத்துக்கொண்டால், இப்பொழுது இருக்கக்கூடிய கஷ்டங்களை விட இன்னும் அதிகமாக இருக்குமென்று சர்க்கார் நினைக்கிறது.

திரு. காஞ்சி மணிமொழியார் : கனம் மந்திரி அவர்கள் கூட்டிய முக்கூட்டு மகாநாட்டில் கூட்டுறவு சங்கங்களுக்கு மில் விலைக்கும், பதிவு செய்யப்பட்ட இதர சங்கங்களுக்கும் ஒரு சத விகித லாபத்திலும் நூல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் மற்ற நெசவாளிகள் இப்பொழுது 15 அல்லது 20 சத விகிதம் லாபம் கொடுத்து வாங்கவேண்டிய கஷ்டம் இருப்பதால், குறைந்த பட்ச லாபத்தை நிர்ணயித்து, கூடியவரையில் விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விலைக் கட்டுப்பாடு வந்தாலொழிய எந்த விதமான ஏற்பாடும் செய்ய முடியாது. விலைக்கட்டுப்பாட்டை இந்த ராஜ்ய சர்க்கார் செய்ய முடியாது.

திரு. வை. சங்கரன் : கூட்டுறவு நூற்பு மில்கள் ஏற்படுத்துவதன் அடிப்படை நோக்கங்களில் ஒன்று கூட்டுறவு நெசவாளர்களுக்குக் குறைந்த விலைக்கு நூல் சப்ளை செய்ய வேண்டுமென்பது. ஆகவே கூட்டுறவு நூற்பாலைகள் வரையிலாவது, குறைந்த விலையில் நெசவாளிகளுக்கு நூலைக் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : போதிய அளவு நூல் நமக்குக் கூட்டுறவு ஆலைகள் மூலம் வர ஆரம்பித்து விட்டால், ஓரளவு தமிழ் நாட்டிலே நூல் விலையைக் கட்டுப்படுத்த முடியும். அதற்காகத்தான் ஆறு புதிய கூட்டுறவு ஆலைகளை நிறுவ தீர்மானம் செய்திருக்கிறோம். மூன்று கூட்டுறவு ஆலைகள் இப்பொழுது கட்டியாய் விட்டது. இரண்டு வேலை செய்து கொண்டிருக்கின்றன. மற்றொன்று கூடிய சீக்கிரத்தில் வேலை செய்வதற்குத் தொடங்கும்.

* 325 *Q*.—Sri M. V. KARIVENGADAM : } Sri V. KRISHNAMOORTHY : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have made any representation to the Central Government for the removal of the levy and enhancement of tax on yarn (handloom); and

(*b*) if so, the result thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. The State Government represented to the Central Government the adverse effect the proposed taxes will have on the handloom industry.

(*b*) The Government of India have since announced that all single cotton yarn, whether bleached or grey, as well as unprocessed (grey) folded cotton yarns, if issued in hanks upto 40s is totally exempted from duty.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த ஆண்டு அரசாங்கம் தலையிட்டு நெசவாளருக்கு நன்மை செய்ததற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். இதைப்போல் ஒவ்வொரு ஆண்டிலும் இந்த நிர்ப்பந்தம் ஏற்படாமல் இருக்க, கதர் நூலுக்கு இருப்பது போல், இந்த கைத்தறி நூலுக்கு செஸ் வரி விதிக்காமல் பாதுகாப்பு அளிப்பதற்கு நம்முடைய கனம் அமைச்சர் அவர்கள் இனிமேலாவது முன்வருவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : It is a question about the future.